


சுதந்திரப் போராட்ட வீரர் பொல்லான் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், ஜெயராமபுரத்தில் உள்ள மாவீரன் பொல்லான் அரங்கத்தில் உள்ள அவரின் திருவுருவ சிலைக்கு வீட்டுவசதி, மதுவிலக்கு, மற்றும் ஆயதீர்வை துறை அமைச்சர் சு. முத்துசாமி மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கழக நெசவாளரணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், தூய்மை பணியாளர் நல வாரிய தலைவர் திப்பம்பட்டி ஆறுசாமி, தூய்மை பணியாளர் நல வாரிய துணை தலைவர் கனிமொழி, ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜாதா, ஈரோடு வருவாய் கோட்டாச்சியர் சிந்துஜா, செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலர் சுகுமார், அறச்சலூர் பேரூராட்சி தலைவர் விஜயகுமார், உதவி மக்கள் செய்தி தொடர்பு துறை அலுவலர் கலைமாமணி, மாவட்ட அவைத்தலைவர் குமார் கே.முருகேஸ், மொடக்குறிச்சி ஒன்றிய கழக செயலாளர் சு.குணசேகரன், மொடக்குறிச்சி சரவணன், உள்ளிட்ட பலர் உள்ளனர்.



அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், திருமானூர் ஊராட்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், திருச்சி மண்டலம், லால்குடி கிளை மூலம் 02 புதிய BSVI மகளிர் விடியல் பயண பேருந்துகளையும், திருவையாறு கிளை மூலம் ஒரு பேருந்து வழித்தடத்தினை நீட்டிப்பு செய்து போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா மற்றும் பலர் உள்ளனர்.

### அரியலூர் மாவட்டம் திருமானூரில்

# 02 புதிய BSVI மகளிர் விடியல் பயண பேருந்துகள் - ஒரு பேருந்து வழித்தடம் நீட்டிப்பு!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

அரியலூர்,ஜன.2-

அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், திருமானூர் ஊராட்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், திருச்சி மண்டலம், லால்குடி கிளை மூலம் 02 புதிய BSVI மகளிர் விடியல் பயண பேருந்துகளையும், திருவையாறு கிளை மூலம் ஒரு பேருந்து வழித்தடத்தினை நீட்டிப்பு செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசின் போக்குவரத்து கழகம் சார்பில், பொது மக்கள், மகளிர், மாற்றுத்திறனாளிகள், திரு நங்கைகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள் உள்ளிட்டோர்களுக்கு அரசு பேருந்து சேவை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அந்தவகையில் திருமானூர் பேருந்து நிலையத்தில் இன்றைய தினம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப)லிட், திருச்சி மண்டலம், லால்குடி கிளை மூலம் நகர் பேருந்து தடம் எண். 091M லால்குடி யிலிருந்து புள்ளம்பாடி வழியாக வெங்கனூர் மற்றும் நகர் பேருந்து தடம் எண். 091E லால்குடி யிலிருந்து புள்ளம்பாடி, திருமழப்பாடி வழியாக திருமானூர் என 02 புதிய BSVI மகளிர் விடியல் பயண பேருந்துகளையும், மேலும் திருவையாறு கிளை நகர் பேருந்து தடம் எண். P93 திருவையாறு பேருந்து நிலையத்திலிருந்து வெங்கனூர் வரை 4 நடைகள் இயக்கப்பட்டு வருவதனை கோவில் எசனை, விளாகம், சன்னா வூர் வழியாக கல்லக்குடி வரை 9 கி.மீ தடநீட்டிப்பு செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், கும்பகோணம் நிர்வாக இயக்குநர் க.தசரதன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.ஆ.ரா.சிவராமன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலம் பொது மேலாளர் சதீஸ்குமார், போக்குவரத்துக் கழக கோட்ட மேலாளர் பெரம்பலூர், திருவையாறு கிளை மேலாளர் சரவணன், அரியலூர் வட்டாட்சியர் முத்து லெட்சுமி, மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகரன், லதா பாலு, ஒன்றிய பொறுப்பா ளர்கள் இரா. கென்னடி, அசோகசக்ரவர்த்தி, ஏ.ஜி.எஸ்.முருகன், திருச்சி மண்டல தலைவர் டி.சேகர், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், அரியலூர் தொமுச செயலாளர்

பி.வி.அன்பழகன், செல்வம், செல்வ.பிரபாகரன், எஸ்.ஆர்.முருகேசன், ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர் இலக்கிய தாசன், தொழிற்சங்க பிரதிநிதிகள் , ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு !



சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் இன்று (02.01.2026-வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணியளவில், எடப்பாடி நைனாம்பட்டியில் உள்ள, “ஸ்ரீ நடராஜன் மஹால் திருமண மண்டபத்தில்”, மாவட்ட கழக அவைத் தலைவர் பி.தங்கமுத்து தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள் முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, மீனவர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்று சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகியவற்றின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1) தைத்திங்கள் தமிழர் திருநாள் திராவிட பொங்கல்சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம் குறித்து

2) சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு (SIR) குறித்து.

3) கழக ஆக்கப்பணிகள் குறித்து.

**டி.எம்.செல்வகணபதி, எம்.பி.**

செயலாளர் - சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.



சேலம் கிழக்கு மாவட்டம் வீரபாண்டி தெற்கு ஒன்றியத்தின் சார்பில் துணை முதல்வர். உதயநிதி ஸ்டாலின் பிறந்த தினத்தையொட்டி மாரத்தான் போட்டி நடைபெற்றதில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. மேற்கு மாவட்ட செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. ஆகியோர். கோப்பைகளையும் சான்றிதழ்களையும். ஒன்றிய செயலாளர். வெண்ணிலா சேகர் முன்னிலையில் வழங்கினார்கள். உடன் மாநில தகவல் தொழில் நுட்ப அணி செயலாளர் டாக்டர் ஆ.கா.தரூண்,கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் மு.ரா. கருணாநிதி, நெசவாளர் அணி அமைப்பாளர். ஏ ஏ. ஆறுமுகம், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர். ரமேஷ் உட்பட நிர்வாகிகள் இருந்தனர்.

# குரலற்றவர்களின் குரலாக....



முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு ஒரு வழக்கம் இருந்தது. அவர் தனது சொந்த வாழ்க்கை, சினிமா துறை, அரசியல் இப்படியாக அனைத்தையுமே. தான் ஆட்சி அதிகாரத்திற்கு வரும்பொழுதெல்லாம் லிங்க் பண்ணி விடுவார்.

மிக மிக மிக... எத்தனை மிக வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளுங்கள். அத்தனை மிகவும் பின் தங்கிய சமூகத்திலிருந்து வந்தவன் என்று தன்னை அவர் ஒரு தரம் குறிப்பிடுகிறார். அந்த வலியும் வேதனையும், அவமானமும் தான் சமூகநீதி எனும் அனைத்து சமூகங்களுக்குமான ஒரே நீதி. சமூகநீதி. சமநீதி. சமத்துவம். சுயமரியாதை. இப்படியான கொள்கைகளை உரத்துச் சொன்ன இயக்கத்தில் தன்னை முழுமூச்சாக. அதையே தன் வாழ்க்கையாக அமைத்துக்கொள்ள காரணமாக அமைந்தது என்றே எண்ணுகிறேன்!

அந்த இயக்கத்தில் மிகத்தீவிரமாக ஈடுபட்ட காரணத்தினாலேயே. அவர் மீது ஏவப்பட்ட வன்முறை வெறியாட்டத்தால், அவருடைய கண்ணில் ஏற்பட்ட கோளாறு.

அவர் ஆட்சிக்கு வந்ததும் ஏழை, எளிய, அடித்தட்டு மக்களுக்கான இலவச கண்ணொளித்திட்டமாக உருவெடுத்தது!

தன்னுடைய #பராசக்தி படத்தில். “தமிழ்நாட்டில் கால் வைத்த உடனேயே கேட்கின்ற முதல் குரல். அம்மா தாயே. “ என்று அவர் எழுதிய வசனம் தான். தமிழ்நாட்டைப் பற்றிய அவருக்கு இருந்த ஒரு கனவு.

ஆட்சி அதிகாரம் அவர் கரங்களில் தவழ்ந்த போது. பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு திட்டமாக மலர்ந்தது!

இப்படி தலைவர் கலைஞர் கொண்டு வந்த ஒவ்வொரு திட்டத்திற்கும்பின்னால். அவர்தனதுசொந்தவாழ்விலோ அல்லது சமூகத்திலோ அவர் அனுபவித்த அல்லது சந்தித்த பிரச்சினைகளை. வசனங்கள் மூலமாக அவரது படங்களில் பொருத்தி. அவைகள் அனைத்தையுமே அவர் ஆட்சிக்காலங்களில் திட்டங்களாக நிறைவேற்றி. அந்த சமூக அவலங்களை எல்லாம் கலைந்தார்.

இதை ஏன் இப்போ நினைவு கொள்கிறேன் என்றால்.



**சௌமியன் வைத்தியநாதன்**
*கழக இலக்கிய அணி துணைச் செயலாளர்*

இரண்டு நாட்களுக்கு முன்பாக சென்னை மெரினா கடற்கரை அருகில் பேரறிஞர் அண்ணா சதுக்க பேருந்து நிலையத்தின் பின்பக்கம்... 2500 சதுர அடியில் மிக மிக அற்புதமான ஒரு கட்டிடத்தை தமிழ்நாடு துணை முதலமைச்சரும். தலைவர் கலைஞரின் பெயரனுமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

என்னய்யா ஒரு சாதாரண கட்டிடம் திறந்து வைத்ததற்கா இவ்வளவு பில்டப் என்று கேட்பீர்களேயாயின்.

விஷயம் இருக்கின்றது. அந்த கட்டிடம் எதற்காக வென்றால். மெரினா கடற்கரையில் தரையில் கடைகள் போட்டு, சிறு சிறு சாமான்கள் விற்பனை செய்து காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கும் வீடற்ற மக்கள், இரவு நேரங்களில் அங்கேயேவோ அல்லது ஏதாவது ஒரு பிளாட்ஃபாரத்திலோ படுத்து உறங்கி காலை எழுந்து மீண்டும் தங்கள் வியாபாரத்தில் ஈடுபடுவார்கள்.

இதை மையமாக வைத்துத் தான் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடித்த #மனிதன் என்ற திரைப்படம் உருவானது. அதில் அந்த பிளாட்ஃபார வாசிகளுக்கு ஒரு பணக்கார இளைஞனால் ஏற்பட்ட பெரும் தீங்குக்கு... வழக்கறிஞராக நின்று நியாயமும், நீதியும் வாங்கித் தருவார்!

அந்த திரைப்படத்தின் ரீலில் அவர் ஹீரோவாக செய்த காரியம் தான்.

இன்றைக்கு அவரது ரியல் வாழ்வில். அவர் கரங்களில் ஆட்சி அதிகாரம் தவழும் பொழுது. அப்படியான ப்ளாட்ஃபார வாசிகளுக்கு இரவு நேரங்களில். நிம்மதியாகவும், பாதுகாப்பாகவும், பயமின்றியும் உறங்கி எழுந்து மறுநாள் தங்கள் வியாபாரத்தைக் கவனிப்பதற்காக கட்டிக் கொடுக்கப்பட்ட கட்டிடம் தான் அது!

அவர்களுக்கு இனாமாக செய்வது தானே என்று ஏனோ தானோ என்று இல்லாமல், முழுவதும் தரமான டைல்ஸ் போடப்பட்ட தளம், அனைவருக்கும் ஃபேன் வசதி, பாய், தலையணை, போர்வை... ஆண்கள், பெண்களுக்கு தனித்தனியாக, தேவையான அளவிற்கு குளியலறை மற்றும் கழிப்பறைகள். அம்மா உணவகத்தில் இருந்து உணவு. 24 மணி நேர செக்யூரிடி வசதி. இவை அனைத்திற்கும் உச்சமாக.

அவர்களுக்கு பிள்ளைகள் இருப்பார்கள் அல்லவா?!

அந்த பிள்ளைகள் தங்கள் பெற்றோருடன் வேலைக்குச் செல்ல வேண்டாம். அவர்களும் மற்ற பிள்ளைகள் போல பள்ளிக்குச் சென்று படிப்பதற்கான ஏற்பாடுகளையும் அரசு பள்ளிக்கல்வித் துறை மூலமே செய்து கொடுத்து.

அதோடு மட்டுமல்லாமல். அந்த மக்கள் தங்கள் வியாபாரத்தை இன்னும் அபிவிருத்தி செய்து கொள்ளும் வகையில் அவர்களுக்கான கைவினை மற்றும் சிறு சிறு தயாரிப்பு களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகள்.

ச்சான்ஸே இல்லை இவர்களால் ஏதாவது வாக்குகள் கிடைக்கப் போகின்றதா என்ன..?! அதைப் பற்றியெல்லாம் கவலை கொள்ளாமல். தாழக்கிடப்போரை கை தூக்கி விடுவதே அறம் என்பதற்கு உதாரணமாக. குரலற்றவர்களின் குரலாக.

இவர் கலைஞரின் பேரன். தோழியர் விடுதி தந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் மகன். விதை நல்லதாக இருந்தால். வாரிசாக இருந்தாலும் தவறில்லை!



கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம், குருபரப்பள்ளி அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்ட மருத்துவ முகாமை பார்வையிட்டு கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் வழங்கினார்கள். உடன், மாவட்ட சுகாதார அலுவலர் ரமேஷ் குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் அன்பரசன், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் செந்தில் கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேல்மணி உள்ளிட்ட ஏராளமானோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.




தந்தை பெரியார் அவர்களின் 52வது நினைவு நாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் தலைமையில் அவரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். ஆர்.எஸ்.புரம் பூபாலன் தந்தை பெரியாரின் கொள்கைகள் அடங்கிய துண்டு பிரசுரத்தை அனைவருக்கும் வழங்கினார். இதில் தந்தை பெரியார் திராவிடர் கழக பொதுச்செயலாளர் கு.ராமகிருஷ்ணன், மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகர மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், தீர்மானக் குழு இணை செயலாளர் பி.நாச்சிமுத்து, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை செயலாளர் மீனா ஜெயக்குமார், தீர்மான குழு உறுப்பினர் மு.ரா.செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர் சரஸ்வதி, கார்த்திகேயன், பகுதி கழக பொறுப்பாளர்கள் சேதுராமன், டெம்போ சிவா, நடராஜ், கோவை லோகு, தேவசீலன், பசுபதி, சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அன்னம்மாள், அர்ஜுன், ஐடி சுரேஷ், நாராயணன், கோவை சம்பத், வழக்கறிஞர் கணேஷ் குமார், துரை கதிரவன், வட்ட செயலாளர் போஸ், உக்கடம் ஆனந்த், எல்பிஎப் விவேகானந்தன்,ஸ்ரீதர், இபி கிருஷ்ணன், அழகு மலை, கமல் மனோகரன், செந்தில், ஆர்.ஆர்.மோகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.